பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 09 2026 THURSDAY 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நீர் சேமிப்பிற்கு திறன்மிகு தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டுமென்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.
2. நாட்டில் சாலை விபத்துக்களை தடுப்பதற்கு மக்களிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.
3. மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடை வரை தடையின்றி சென்றடைவதை அரசு உறுதி செய்ய வேண்டுமென்று மாநில பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
4. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. துலீப் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தென்மண்டல அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நீர் சேமிப்பிற்கான திறன்மிகு தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டுமென்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் மத்திய நீர்வள அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த நீர் தொடர்பான தேசிய அளவிலான துறைசார் உச்சிமாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

இதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் திறன்மிக்க தீர்வுகளை உருவாக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

அதை விரிவுப்படுத்தும் வகையில் உலக அளவில் சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்த கண்காட்சிகளையும், பயிலரங்குகளையும் நடத்த வேண்டுமென்று அவர் கூறினார்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் தொகை பெருக்கம், எதிர்கால நீர்தேவை உள்ளிட்ட சவால்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

உச்சிமாநாட்டின் மூலம் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் செயல்திட்டங்களை பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நீர் சேமிப்பில் மக்களின் பங்களிப்பு குறித்து வலியுறுத்திய பிரதமர், நீர் திருவிழா திட்டத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தார்.

நீர்நிலைகளில் தூர்வாரும் பணியை வழக்கமான திட்டமாக மாற்றுவதற்கு ஏற்ற நடைமுறைகளை உருவாக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

அணை பாதுகாப்பு குறித்து குறிப்பிட்ட பிரதமர், ஆண்டுதோறும் பருவமழைக்கு முன்பாக ஆயத்தப்பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டுமென்றும் அதை பாடத்திட்டங்களில் சேர்ப்பதன் மூலம் பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறினார்.

அத்துடன் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் நீர் மேலாண்மை மற்றும் அதன் நிர்வாகம் குறித்த திறனை வலுப்படுத்த வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

சுத்திகரிக்கப்பட்ட நீரை வேளாண் மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதன் வாயிலாக தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

நாட்டில் சாலை விபத்துக்களை தடுப்பதற்கு மக்களிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நெடுஞ்சாலைகள் தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், சாலை விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும், ஆண்டுதோறும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் உயிரிழப்பதாகவும் தெரிவித்தார்.

இதை தவிர்ப்பதற்கு வாகன ஓட்டுனர்களின் திறனை மேம்படுத்தவும், பாதுகாப்பான முறையில் சாலையில் வாகனங்களை இயக்குவதற்கும், உரிய ஓட்டுனர் பயிற்சி மையங்களை அமைக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

ஓட்டுநர்களின் உடல்நலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று திரு. நிதின் கட்கரி வலியுறுத்தினார்.

<<<<>>>>

மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடை வரை தடையின்றி சென்றடைவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டுமென்று மாநில பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டள்ளதை வரவேற்கும் அதே வேளையில், விவசாயிகளின் உயிர்நாடியான இவ்விவகாரத்தில் அரசின் மெத்தன போக்கு கவலை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடகா அரசிடம் உரிய நேரத்தில் பேசி முன்கூட்டியே தண்ணீரை பெற்றிருக்க வேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

வாக்குறுதிகளின்படி பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யவும், இடுபொருள் மானியங்கள் விவசாயிகளுக்கு உடனடியாக கிடைக்கவும் முதலமைச்சர் திரு. விஜய் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

போதைப்பொருள் பழக்கமில்லாத சமூகத்தை உருவாக்கும் வகையில், செஞ்சிலுவை சங்கம் வாயிலாகவும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் ஒரு பகுதியாக இந்த விழிப்புணர்வு நிகழ்வு சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

அப்பொது போதைப்பொருள் பயன்படுத்தமாட்டோம் என்று மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவுக்கு எதிரான மோதலில் புதிய அணுகுமுறை பயன்படுத்தப்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

நேபாள பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 250 ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

பெல்ஜியம் பிரதமர் திரு. Bart De Wever, இந்தியாவில் இன்று முதல் 3 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் 14 வயதுடைய வளர் இளம் பெண்களுக்கு கர்ப்பப்பை புற்றுநோய் தடுப்பிற்கான தடுப்பூசி செலுத்தும் முகாம் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

ஆந்திரப்பிரதேசத்தில் போலாவரம் இடது பிரதான கால்வாயிலிருந்து வடக்கு ஆந்திர பகுதிக்கு கோதாவரி நீரை முதலமைச்சர் திரு.சந்திரபாபு நாயுடு திறந்து வைத்தார்.

<<<<>>>>

நடப்பு கல்வி ஆண்டில் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தில் எம்டி மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான சேர்க்கை இம்மாதம் 10 ஆம் தேதி வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் சிங்கப்பெண் அதிரடிப்படை சார்பில், மகளிர் பாதுகாப்பு மற்றும் இணையவழி குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு பகுதியில், சிறுமி ஒருவரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ஒருவர் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

<<<<>>>>

*ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே சீமை கருவேல மரங்கள் அகற்றும் பணியை ஆட்சியர் திரு. சிவகுரு பிரபாகரனுடன் இணைந்து, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி செல்வம் ஆய்வு செய்தார்.*

<<<<>>>>

*பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட சமரச தீர்வு மையத்திலும், துணை சமரச தீர்வு மையங்களிலும் இம்மாதம் 30-ம் தேதி வரை வழக்குகளுக்கு சமரச தீர்வுகாணும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.*

<<<<>>>>